# ஒரு பெண் தலையை மறைப்பாதனது பிற்போக்குவாதமா? அது அவளை பின்னோக்கி கொண்டு செல்லுமா?

தலையை திறப்பதே பிற்போக்காகும். உண்மையில் தலையை மறைத்தல் பிற்போக்குவாதம் என்றிந்தால் முதல் மனிதர் ஆதம் அவர்களின் காலத்தையும் அவ்வாறுதான் குறிப்பிடவேண்டுமல்லவா? காரணம் ஆதமையும் அவரின் மனைவியையும் இறைவன் படைத்து சுவர்க்கத்தில் குடியிருக்க செய்தது முதல் அவர்களுக்கு மறைத்தலையும் ஆடை அணிவதையும் உத்தரவாதப்படுத்தினான்.

"நிச்சயமாக நீர் இ(ச் சுவர்க்கத்)தில் பசியாகவோ நிர்வாணமாகவோ இருக்கமாட்டீர்". (தாஹா:118). تقدم

இவ்வாறேஆதமின் சந்ததியினருக்கு தங்களின் மானத்தை-வெட்கத்தளத்தை- மறைப்பதற்கும் அலங்கரித்துக் கொள்வதற்குமென அல்லாஹ் ஆடையை இறக்கினான். அப்போதிருந்தே மனிதகுலம் தங்களுக்கான ஆடை அணிகளன்களை விருத்திசெய்துள்ளது. இந்த அடிப்படையில் சமூகங்களின் வளர்ச்சியானது ஆடை மற்றும் அடக்கத்தின் முன்னேற்றத்தைக் கொண்டே அளவிடப்படுகிறது. சில ஆபிரிக்க பழங்குடியினர் போன்ற நாகரீக வாசனையற்ற சில சமூகங்கள் தங்கள் மானத்தை –வெட்கத்தளத்தை- மறைக்கும் ஆடைகளை மட்டுமே அணிகின்ற வழக்கத்தைக் கொண்டுள்ளனர் என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

"ஆதமுடைய சந்ததியினரே! உங்கள் வெட்கத்தளங்களை மறைக்கும் ஆடைகளையும் அலங்காரத்தையும் நாம் இறக்கியிருக்கிறோம். எனினும் பயபக்தி இறையச்சம் எனும் ஆடையே மிகவும சிறந்ததாகும். இவை அவர்கள் நல்லுபதேசம் பெறுவதற்கான கூறப்படும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் உள்ளவையாகும்". (அல் அஃராப் :26 ). تقدم

மேற்கு நாட்டவர் ஒருவர் தனது பாட்டி பாடசாலைக்குச் செல்லும் வேளை எவ்வாறான ஆடைகளை அணிந்திருந்தாள் என்பதை பார்க்கட்டும்!. நீச்சலுடைகள் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்போது, மதக் காரணங்களுக்கல்லாது, இயற்கை மற்றும் பழக்கவழக்கங்களுக்கு எதிரானதாக அது கருதப்பட்டதால், அந்த ஆடைக்கெதிராக ஐரோப்பாவிலும் அவுஸ்திரேலியாவிலும் பெரும் எதிர்ப்புகள் வெடித்தன. உற்பத்தி நிறுவனங்கள் தங்கள் நீச்சலுடைகளை விளம்பரப்படுத்த ஐந்து வயது சிறுமிகளைப் பயன்படுத்தி தீவிர விளம்பரப் பிரச்சாரங்களை மேற்கொண்டன. அப்போது அந்த விளம்பரத்தில் நீச்சல் உடையை அணிந்து வந்த முதல் குழந்தை மிகவும் வெட்கத்துடனே

நடந்து சென்றது, மாத்திரமல்லாமல் தொடர்ந்து அந்த விளம்பரக் காட்சியை நடத்த முடியாமல் போனது. அக்காலத்தில் ஆண் பெண் இருபாலரும் உடல் முழுவதையும் மறைத்து கறுப்பு மற்றும் வெள்ளை நிறங்களிலான நீச்சல் ஆடை அணிந்து நீந்துவோராக இருந்தனர்.

---

இஸ்லாம் குறித்த கேள்வி பதில்
Source: https://www.nwahy.com/qa-islam/ta/83/
Arabic Source: https://www.nwahy.com/qa-islam/ar/83/
Sunday 3rd of May 2026 09:50:13 PM